ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

**Tamil Translation**

02 நவம்பர் 2021.

அதிமேதகு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள்,
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி,
ஜனாதிபதி செயலகம்,
கொழும்பு 1.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களிற்கு,

**'ஒரே நாடு ஒரே சட்டம்' எனும் ஜனாதிபதி செயலணியிற்கான நியமனங்கள்**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது அரசியலமைப்பின் 33 ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க, அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' எனும் ஜனாதிபதி செயலணியினை நியமித்துள்ளமையை கவனத்தில் கொண்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் பிரகடனமாவது நீதித்துறையின் நிர்வாகமும் சட்டத்தின் கீழான அதன் அமுலாக்கம் மற்றும் பாதுகாப்பு என்பனவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பினால் விதந்துரைக்கப்பட்டுள்ளதன்படி, அனைவருக்கும் நியாமாக்கப்படவேண்டியது குறித்து கவனம் செலுத்துவதற்காக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றது. அதன் பிரஸ்தாபங்கள் அடிப்படை உரிமையின் கீழ் எந்தவொரு குடிமகனும் இனம், மதம், சாதி அல்லது வேறெந்த அடிப்படையிலும் சட்டத்தின் பாதுகாப்பு மற்றும் விசேட கவனத்திற்கு உள்ளாக்கப்படக்கூடாது என்பதனை கவனத்தில் கொண்டுள்ளது. அது மேலும் இலங்கையில் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்னும் கருத்தாக்கத்தின் அமுலாக்கமானது தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியல் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித விழுமியங்களை உறுதிப்படுத்தும் ஒரு முறைமையையும் அனைத்து குடிமக்களும் சட்டத்தின் பார்வையில் ஒன்றாக பாவிக்கப்படவேண்டும் எனும் உண்மையை மேலும் உறுதிப்படுத்துவதனையும் பிரதிபலிப்பதாக குறிப்பிடுகின்றது.

செயலணியானது இலங்கையில் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' எனும் கருத்தாக்கத்தினை அமுல்படுத்தல் தொடர்பாக ஆராய்ந்து மேற்குறித்த நோக்கத்திற்காக சட்டவரைவு ஒன்றினை தயாரிப்பதற்கும், நீதி அமைச்சினால் அது தொடர்பில் ஏலவே தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு மற்றும் அதன் பொருத்தப்பாடுகளை ஆராய்ந்து அது தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் காணப்படுமாயின் அதற்கான முன்மொழிகளை சமர்ப்பிக்கவும் கோரப்பட்டுள்ளது.

சட்டவரைவுகளை தயாரிப்பதும் தற்போதுள்ள சட்டங்களை ஆராய்வதும் அரசின் பல நிறுவனங்கள் உள்ளடங்கும் ஒரு தீவிரமான விடயம் என்பது குறித்து அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் அறிந்திருப்பீர்கள் என்பதில் எந்தவொரு சந்தேகமும் கிடையாது. சட்டவாக்க அதிகாரம் என்பது மக்கள் இறைமையின் ஓர் அம்சமாக கொள்ளப்படுகிறது.

அரசியலமைப்பானது ஏனைய சட்டங்களின் பிற்சேர்க்கையுடனும் பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டங்களுடனுமாக சட்டவாக்க செயன்முறையிற்கான சட்டகத்தை தந்துள்ளது.



President
Saliya Pieris PC
Deputy President
Anura Meddegoda PC
Secretary
Rajeev Amarasuriya
Treasurer
Rajindh Perera
Assistant Secretary
Pasindu Silva

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

அரசியலமைப்பின் சட்டகத்தில் ஏலவே காணப்படுகின்ற, சட்டம் மற்றும் நிலையியற் கட்டளைகள் என்பன, இந்நோக்கத்திற்கு போதுமான பொறிமுறைகளாக காணப்படுகின்றன. பாராளுமன்ற துறைசார் நிபுணத்துவ குழு மற்றும் அதனைப் போன்று பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளால் அமைக்கப்படக்கூடிய நிலையியல் குழுக்கள் மற்றும் தெரிவு குழுக்கள், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமான சட்ட ஆணைக்குழு என்பன இப்பொறிமுறைக்கானவையாக காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக, கடந்த வருடத்தில் நீதி அமைச்சானது பல்வேறு சட்டங்கள் குறித்து சீர்திருத்தங்களை பிரேரிக்க பல குழுக்களை நியமித்தது.

துறைசார் நிபுணத்துவ குழுவானது சட்டவாக்க உறுப்பினர்களால் தலைமை தாங்கப்பட்ட அதேசமயம், சட்ட ஆணைக்குழுவானது சிரேஷ்ட ஜனாதிபதி சட்ட ஆலோசகர் ஒருவரால் தலைமைத்தாங்கப்பட்டது. நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட இக்குழுக்கள் சட்டத் தொழிலின் பல சிரேஷ்ட உறுப்பினர்களையும் சிரேஷ்ட கல்வியியலாளர்களையும் உள்ளடக்கியிருந்தன. இவற்றின் சில குழுக்கள் உச்ச நீதிமன்றங்களின் நீதிபதிகளினால் தலைமைத்தாங்கப்பட்டிருந்தன.

இப்பொறிமுறைகளிற்கு அப்பால், சட்டமா அதிபரும் அவரது திணைக்களமும் சட்டவாக்க செயன்முறையில் பிரதான பாத்திரத்தை வகிப்பதோடு அது அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டவொன்றுமாகும். இச்செயன்முறையில் பிரதான பாத்திரத்தை வகிக்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டுள்ளமையானது சட்டமா அதிபரதும் அவரது அதிகாரிகளதும் வகிபங்கினை செயலணி ஆற்றப்போகின்றதா எனும் கேள்வியை எழுப்புகின்றது.

இச்சூழ்நிலையில், நீதி அமைச்சினது வேலைகளை மேற்பார்வையிடுவதற்காக செயலணியை நியமித்தமையானது இசசதின் பார்வையில் முறையற்றதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட உருவாக்க சட்டகத்திற்கு அப்பாற்பட்டதாகவும் காணப்படுகின்றது. முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டவாக்கத்தினரால் கிரமமாக செயற்படுத்தப்பட்டவற்றிற்கும் முறையாக உரித்தாக்கப்பட்ட நிறைவேற்று செயற்பாட்டாளர்களது பணிகளின் இடமாற்றலுமாகிய எந்தவொரு அந்நியப்படுத்தலும் மக்களது இறைமையை அழிவிற்குட்படுத்துவதனிலேயே ஈடுபடும்.

எந்தவொரு பெண் பிரதிநிதிகளையோ நாட்டின் பல்வேறு இனக்குழுக்கள் மற்றும் மதக்குழுக்களின் பிரதிநிதிகளையோ கொண்டிராத இச்செயலணியானது ஒரு பிரதிநிதித்துவ அங்கமாக விளங்கமுடியாது என்பது இசசதின் பார்வையாகும். செயலணியின் தலைவர் மற்றும் வர்த்தமானியில் விவரிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்வதில் ஈடுபடப்போகும் அதன் ஏனைய பல உறுப்பினர்களது தகைமைகள், நிபுணத்துவம் மற்றும் பொருத்தப்பாடு என்பன குறித்து தீவிரமான சந்தேகங்கள் எழுகின்றன.

சமத்துவம், நியாயம், பாரபட்சமின்னை, சட்டத்தின் பாதுகாப்பு மற்றும் தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித விழுமியங்கள் என்பன முக்கியமான கோட்பாடுகள் என்பதனில் எந்தவித சந்தேகமும் இல்லை. எனினும் இப்பெறுமதிகளை உயர்த்துவதில் ஏதேனும் அர்த்தமுள்ள பங்களிப்புக்களை வழங்குவதற்கு வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயன்முறையும் செயலணியின் உருவாக்கமும் பங்களிக்குமா என்பது சந்தேகமாக காணப்படுகின்றது.

அரசும் அதிமேதகு ஜனாதிபதியாக தாங்கள் தலைமை வகிக்கும் நிறைவேற்றுத்துறை உள்ளிட்ட அரசாங்கத்தின் ஏனைய உறுப்புக்களும் சட்டத்தின் ஆட்சியை உயர்த்திப்பிடித்தலும் பாதுகாப்பை கொணர்வதும் அரசியலமைப்பின் 4(ஈ) சரத்தில் விபரிக்கப்பட்டுள்ளதின்படி அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதுமே நாட்டின் தற்போதைய அதிமுக்கிய விடயமாக காணப்படுகின்றது. உண்மையில், வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நோக்கங்களை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த வழியானது சட்டவாட்சியை பேணலும் மக்களது அடிப்படை உரிமைகளை மதித்தலுமாகும்.



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Rajeev Amarasuriya | Treasurer Rajindh Perera | Assistant Secretary Pasindu Silva

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

சடந்த சில மாதங்களில், சட்டவாட்சியும் மக்களது அடிப்படை உரிமைகளும் மீறப்பட்ட பல்வேறு சமயங்களிலும் இசசமானது அதிமேதகு ஜனாதிபதி தங்களதும் அரசாங்கத்தினதும் கவனத்தை ஈர்ப்பதில் சிரத்தையுடன் செயலாற்றியுள்ளது. எனினும் இவை தொடர்பில் எந்தவொரு இழப்பீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை இசசமானது வருத்தத்துடன் குறித்துள்ளது.

மேற்குறித்தவற்றின் அடிப்படையில், பாராளுமன்றம் மற்றும் நீதி அமைச்சு உட்பட அரசியலமைப்பு மற்றும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல நிறுவனங்களது செயற்பாடுகளையும் இது பறிக்கும் எனும் இசசதின் பார்வையின் அடிப்படையில் செயலணியின் உருவாக்கமும் நியமனமும் எந்தவொரு பயனுள்ள நோக்கத்தையும் ஆற்றாது என்பது இசசதின் பார்வையாக காணப்படுகின்றது.

தங்கள் உண்மையுள்ள,

கையொப்பம் இடப்பட்டுள்ளது

**ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்,**
தலைவர்,
இலங்கை சட்டத்தரணிகள் சங்கம

கையொப்பம் இடப்பட்டுள்ளது

**ராஜீவ் அமரசூரிய,**
செயலாளர்,
இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்.



President
**Saliya Pieris PC**
Deputy President
**Anura Meddegoda PC**
Secretary
**Rajeev Amarasuriya**
Treasurer
**Rajindh Perera**
Assistant Secretary
**Pasindu Silva**

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk